***DEPOSITION OF WITNESS***
(Chapter XXV BNSS)

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 68/2016 – P.W.5/LW8***

| | |
|---|---|
| *Name* | தெட்சிணாமூர்த்தி |
| *Father/Husband's Name* | பன்னீர்செல்வம் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *61* |

*1 வது எதிரி ஆஜர். 2 வது ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.04.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது திருவாரூர் மாவட்டம், தேவங்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 13.11.2015 ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திகேயன் மனைவி சித்ரா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 1082-2015 ல் 294(பி), 323 இதச and 4 of TNPHW Act ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்தேன். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றைய தினமே பிற்பகல் 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாராங்கபாணி மற்றும் ரெத்தினம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர் மற்றும்**

**வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

5. சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது எதிரிகள் முன்பிணையம் பெற்ற விபரம் தெரிந்து கொண்டேன். மேற்படி வழக்கு கோப்பை அடுத்தக்கட்ட விசாரணைக்காக ஆய்வாளர் சுப்பிரியா பார்வைக்கு வைத்தேன்.

உதவி ஆய்வாளரின் கையொப்பம் மற்றும் அவருடன் பணியாற்றி வகையில் நன்கு தெரியும் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டி நீதியின் நலன் கருதி நான் சாட்சியம் அளிக்கிறேன்.

வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் இச்சம்பவத்தில் காயம்பட்ட சித்ரா மற்றும் கண்ணம்மாள் ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடுகளுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார். **இது ஏற்கெனவே அசா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.

இத்துடன் அவரது விசாரணையை முடித்து 1 வது எதிரியின் செய்கையானது 294(பி), 323 இதச and 4 of TNPHW Act ன் படியும், 2 வது எதிரியின் செய்கையானது 323 இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 30.11.2015 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு புகாரில் புகார்தாரர் சேற்று வயலில் விழுந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்தில் 1,2 எதிரியின் அக்காவும், அம்மாவும் அங்கு இருந்ததாகவோ அல்லது அசா.1 தாக்கியதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

கொட்டகை சாய்ந்து கிடப்பதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் கொட்டகையின் போட்டோவை அசா.1 விசாரணையில் தங்களிடம் கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு. புகார் மனுவில் அசா.1 டம் அவரது அம்மாவும் சேர்த்து கையெழுத்து செய்து கொடுத்தார் என்று சொல்லியிருந்தால் அது தவறு. முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுப்பதற்கு வாதியால் கால தாமதம் என்று குறிபிட்ட நிலையில் தாமத்திற்கான விளக்கம் அதில் இல்லை.

வழக்கின் விபத்து பதிவேட்டில் வழக்கறிஞர் தான் அசா.1 ஐ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். அசா.1 ஐ

விசாரித்தபோது நடந்ததாக சொல்லப்படும் சம்பவ ஸ்தலத்திற்கு அசா.1 சென்றதாகவோ அல்லது வேறு ஏதோ வகையில் சிகிச்சைக்கு சேரத்ததாகவோ இல்லை. ஆனால் அலுலகத்திற்கு தகவல் சொல்லி வரச்சொன்னதாக உள்ளது. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கொட்டகை சாய்ந்து கிடந்ததற்கான குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நீதிமன்றத்திற்கு அடுத்தகட்டிடம் தான் எங்கள் காவல் நிலையம் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் 4 நாட்கள் காலதாமதமாக இந்த வழக்கினுடைய புகாரும், முதல் தகவல் அறிக்கையும் வந்ததற்கு எந்தவித சிறப்புகாரணம் இல்லை என்றால் இல்லை. அதே போல் வழக்கின் ஏனைய ஆவணங்கள் 16.08.2016 ம் தேதிதான் நீதிமனற்த்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதற்கு எந்தவித சிறப்பு காரணம் இல்லை என்றால் சரிதான். வழக்கிற்கு ஏற்றாற்போல் ஆவணங்கள் காலதாமதமாக நீதிமனற்த்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கானது எதிரிடை வழக்கு என்றால் சரிதான். இந்த வழக்கு எதிரி பிரகாஷ் கொடுத்த புகாரின் பேரில் மன்னார்குடி நகர காவல் நிலைய குற்ற 1081/2015 ன் படி இந்த வழக்கினுடைய சாட்சிகள் கண்ணம்மாள், சித்ரா, செல்வி மற்றும் பாலு என்ற வேறோரு நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது, அதற்கு புலன் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான்.

குற்ற எண்.1081/2015 வழக்கின் படி நடந்ததாக சொல்லப்படும் சம்பவ ஸ்தலம் வாதியினுடைய இடத்திற்கு அருகே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரு தரப்பினர்களுக்கிடையே இருந்த சிவில் பிரச்சனை சம்பந்தமாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

எதிரிடை வழக்கு இருக்கும்பட்சத்தில் இரண்டு வழக்கினுடைய ஆவணங்கள், வாக்குமூலங்கள் ஆவணத்தை குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் ஆமாம். இந்த வழக்கில் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. காவல் நிலை ஆணை 558 ன் படி சம்பவ செயலை முதலில் தொடங்க செய்தது யார்? என்ற கோணத்தில் விசாரணையை மேற்கொண்டு இரண்டு வழக்கில் சம்பவ செயலை தொடங்கியவர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, மற்றொரு வழக்கை refer செய்து குற்ற இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும்என்ற நடைமுறையை இந்த வழக்கில் பின்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவம் உண்மை என்பதால் இரண்டு வழக்கிலும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தோம். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பவம் இல்லை என்றும், அசா.1 கொடுத்த

புகாரை சரிவர விசாரணை மேற்கொள்ளாமல் மேலெழுந்த வாரியாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றும், அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.